1472

உ

ஸ்ரீராமஜெயம்

பாலக்காடுதாலூக்கா புத்தூர் வித்வான்

சின்னத்தம்பி அய்யர் அவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

# ராம நாமம்.

முதற்



இஃது

பாலக்காடு சுல்த்தான்பேட்டை

பா. கி. சிதம்பரம்பிள்ளை அவர்களால்

தமது

வித்தியாசந்தானம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1925

விலை அணா 2

Q22:417
N25
128832

உ

ஹரிः ஓம்.

# ராமநாமம்.

நன்மையுஞ்செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்துபோகுமே
ஜென்மமு மரணமு மின்றித்தீருமே
இன்மையில் ராமாவென்றிரண்டெழுத்தினால்.

சீராரும்வைகுந்தவாசநாராயண ராமராமா ஆதி
தேவ பரப்பிர்ம்ம ரூபயகத்துவ ராமராமா
காராருமேனிக் கருணாகரசிவ ராமராமா மலர்க்
கண்ணாவிண்ணுமண்ணு மொன்றாய்விளங்கிய ராமராமா (1)

எகாட்சரப்பொரு ளாகியிலங்கிய ராமராமா உயி
ரேற்றதிரியாட்சர மோட்சபஞ்சாட்சர ராமராமா
மாகாட்சி நல்குஞ் சடாக்ஷரட்டாக்ஷர ராமராமா திரு
வைத்தவுபதேச மட்சரமாகவே ராமராமா (2)

அகரமுதலுயி ராகியுடலாகி ராமராமா நிறைந்
தன்பத்தோரக்ஷரத்தின்பொருளாகிய ராமராமா
ஜெகமெல்லாமுண்டுமிழ்ந்துமளந்திடும் ராமராமா மாய
சத்திசொரூபமா யெத்திக்கிலும் நின்ற ராமராமா (3)

128832 -600

பக்தஜனப்பிரிய சுத்ததத்துவகுண ராமராமா திரு
பாலாழியிற்பண்டு மாலாய்நித்திரை செய்யும் ராமராமா
அத்துவிதப்பர தத்துவநித்திய ராமராமா சது
ரானநனைத்தந்த பூரணகாரண ராமராமா (4)

பத்மநாபாபர மாபுருஷோத்தம ராமராமா மணப்
பங்கயமாதிளங் கொங்கையாலீங்கன ராமராமா
சிற்பரூபமுகுந்தமுகுந்தகா ராமராமா ஆதி
தேவற்சிதம்பர மேவுதிரியம்பக ராமராமா (5)

அச்சுதானந்த முகுந்தமுராந்தக ராமராம நிறைந்
தண்டரண்டபகி ரண்டகோதண்ட ஸ்ரீ ராமராமா
சச்சிதானந்த சொரூப சிவசிவ ராமராமா ஆர்க்கும்
தத்துவசிவதத்துவ வித்தாகிய சிவ ராமராமா (6)

ஒன்றுமில்லாத வுருவருவாய் நின்ற ராமராமா அந்த
ஒருருவிலாண்பெண் ணீருருவாய் வந்த ராமராமா
நன்றிதருமுக்குணமுதலாகிய ராமராமா திசை
நாலாகி நால்வகை யானதெல்லாமான ராமராமா (7)

அஞ்சுநிறப்பஞ்ச பூதமதாகிய ராமராமா ரச
மாராகியேழிசை யாயஷ்டதிக்கான ராமராமா
விஞ்சமற்றுள்ள சராசரமாகிய ராமராமா மூல
வித்தாயதிலெங்கும் பற்றுமலே நின்ற ராமராமா (8)

மூவருமொன்ருய் முளைத்தெழுந்தசிவ ராமராமா அந்த
மூவருந்தேவரும் யாவருங்காணுத ராமராமா
மாவருந்தேரினிற் சூரியனுகவே ராமராமா இந்த
வையகத்தோர்க்கெல்லா மெய்யாய்விளங்கிய ராமராமா (9)

எள்ளுக்குளெண்ணைபோலெங்கும் விளங்கிய ராமராமா நிறைந்
தெங்கெங்குந்தானாகி யங்கெங்குமில்லாத ராமராமா
உள்ளுக்குளுள்ளுருவாகியுடலாகி ராமராமா ஆர்க்கும்
ஓதக்கிடையாத வேதப்பொருளான ராமராமா. (10)

தேவாதிதேவ ஜெகந்நாதகோவிந்த ராமராமா எங்குஞ்
சிற்பரனாகிய சுப்பிரமண்ணியனான ராமராமா
மாவாரணத்தினைக் காத்துரக்ஷித்திடும் ராமராமா உன்
வல்லமையையென்னால்ச் சொல்லப்போமோ ஸ்ரீ ராமராமா (11)

மச்சியகூர்ம வராகநற்சிங்க ராமராமா சிறு
வாமனனேபரசு ராமதெசரத ராமராமா
அச்சமில்லாதிடின் தேவபலபத்திர ராமராமா கற்கி
யானதச அவதாரசர்வேஸ்வர ராமராமா (12)

மச்சியமாகிவை வச்சுதனைக்காத்த ராமராமா ஆ
மையுருவாமெய்யில் மந்தரந்தாங்கிய ராமராமா
அச்சமில்லாத வராகரூபமாகி ராமராமா இரணி
யாட்சதனைக்கொன்று காட்சியாகநின்ற ராமராமா (13)

நரசிங்கமாகி யிரணியனைக்கொன்று ராமராமா அவன்
மைந்தன்பிரகலாதனனைக் காத்து ரெட்சித்த ராமராமா
வரமிகுவாமனரூபமதாகிய ராமராமா வந்து
மாவலியைக்கண்டு மூவடிமண்கொண்ட ராமராமா (14)

சந்தமிகும்பரசு ராமனாகிவந்து ராமராமா மண்ணிற்
சத்திரியமன்னரை முற்றுநீராக்கிய ராமராமா
சிந்தைமகிழ்ந்து தெசரதன்சேயாகி ராமராமா வந்து
தென்னிலங்கைவாழு மன்னவனைக்கொன்ற ராமராமா (15)

வாசுதேவன்பலபத்திரனுகிவந்து ராமராமா துஷ்ட
மன்னவரையெல்லாஞ் சின்னபின்னஞ்செய்த ராமராமா
பாசமகலநற்பஞ்சவரைக்காத்து ராமராமா பூமி
பாரத்தைத்தீர்த்துமண் தாரத்தைக்கார்த்திடும் ராமராமா (16)

கற்கியுருவாகி விக்கினங்கள் தீர்க்க ராமராமா கலி
காலத்தினத்திலே ஞாலத்தைக்கார்த்திடும் ராமராமா
முக்கியமான சண்டாளர்களைக்கொன்று ராமராமா பின்னை
முன்னையுகம்வரத்தன்வயமாக்கிடும் ராமராமா (17)

மோகினியாய்வந்தவுணர்கள் நெஞ்சினில் ராமராமா காம
மூண்டிடச்செய்தவர் மாண்டிடக்கண்டபின் ராமராமா
ஆகுலந்தீர்ந்திடத்தேவர்கள்முன்வந்து ராமராமா பெற்ற
அன்னையைப்போலவே யின்னமுதூட்டிய ராமராமா (18)

அம்பரீடனேகா தேசிவிரதம் நோற்று ராமராமா பா
ரணைபண்ணும்போது முறனுடனேவந்த ராமராமா
வெம்புதுருவாச ரிஷிபயந்தோடவே ராமராமா சக்கரம்
விட்டம்பரீடனை யிட்டமுடன்கார்த்த ராமராமா (19)

ஏகாதேசியிலுருக்குமாங்கதனுக்கு ராமராமா இட
ரிட்டுமகனைவெட்டச்சொல்லுமோகினிக்கி ராமராமா
மாகாதலில்லாமற் சாபங்கொடுத்தபின் ராமராமா உருக்கு
மாங்கதனைத்திருப்பூங்கழலிற்சேர்த்த ராமராமா (20)

ஆணும்பெண்ணுமன மொன்றிப்புணர்வதும் ராமராமா புணர்ந்
தப்பவீரியத்திற் கெற்பமுண்டாவதும் ராமராமா
தோணுமுதராக்கினியிலுதிப்பதும் ராமராமா வுந்தன்
சூத்திரந்தன்னையார் பார்த்தரியார்வல்லர் ராமராமா (21)

அணுவுக்கணுவாகியப்பாலுக்கப்பாலாய் ராமராமா வுதித்
தந்திரந்தன்னிலே சந்திராதித்தராய் ராமராமா
வணுவவில்லாச்சிவசத்திச்சொரூபமாய் ராமராமா ஆர்க்கும்
மாதாபிதாரூபமாகிரெட்சித்திடும் ராமராமா (22)

கைநொடியாய் நாழிகையாய் ராசியாய் ராமராமா கதிர்
காட்டுந்தினம் பக்க மாதமயனமாயி ராமராமா
மெய்யாம் வருடமதாகி யுகமாகி ராமராமா ஊழி
வித்தாயதிலெங்கும் பற்றுமலே வாழும் ராமராமா (23)

ஆதியந்த நடுவுமொன்றில்லாத ராமராமா ரூபம்
ஆணும்பெண்ணுமலியுமொன்றில்லாத ராமராமா
சோதியாயெங்கும் நிறைந்துத்தும்பிய ராமராமா சொல்லுஞ்
சொல்லுக்குமாமனத்தெல்லைக்குமெட்டாத ராமராமா (24)

காயாம்பூவண்ணு கனகபீதாம்பர ராமராமா வுந்தன்
கற்பனைக்கல்லவோ நிற்பதுலோகங்கள் ராமராமா
மாயப்பிரபஞ்ச மயக்கமெல்லாம்விட்டு ராமராமா வுன்னை
மானதத்தாற்காண ஞானதத்துவந்தரும் ராமராமா (25)

மண்ணுங்குடங்களும் பொன்னும் பணிகளும் ராமராமா எங்கும்
வந்ததுபோலவே யிந்தலோகத்திலே ராமராமா
கண்ணுமொளியும்போல் நண்ணியிம்மண்ணிலே ராமராமா எங்கும்
காரணகாரிய பூரணமாய்நின்ற ராமராமா (26)

பூவுமணமும்போல் கண்டுங்காணுமலே ராமராமா வுன்னைப்
போற்றுமுடற்கெல்லாந் தோற்றுமுயிராகி ராமராமா
கோவின்பாலில்நெய் கலந்ததுபோலவே ராமராமா மாய்கைக்
குள்ளாகி யுண்டாகி யில்லாததாய்நின்ற ராமராமா (27)

அந்தரந்தன்னிலே சந்திராதித்தராய் ராமராமா வுதித்
தங்கெங்கொருவனே யெங்கெங்குமானதும் ராமராமா
சிந்தைதெளிந்ததைப் பார்க்கும்பொழுதினில் ராமராமா வுந்தன்
செப்படிவித்தையின் கற்பனையல்லவோ ராமராமா (28)

பூமியாகாசம் விழாமலிருப்பதும் ராமராமா கடல்
பொங்கியுலகெலா முங்கவராததும் ராமராமா
மாமுகில்பூமியிலேமழைபெய்வதும் ராமராமா வித்து
வற்கம்விளைவதுன் கற்பனைக்கல்லவோ ராமராமா (29)

பஞ்சாயுதபரமார்த்த ஜெனார்த்தன ராமராமா சிறு
பாலகனாகியே யாலிலைமேல்வைகும் ராமராமா
வஞ்சகரான நிசாசர்குலாந்தக ராமராமா கெருட
வாகனத்தில்வரு மோகவராகவ ராமராமா (30)

பன்னகத்திற்றுயிலும்பர மானந்த ராமராமா தொழும்
பத்தருக்குக்காக வமர்தருமம் நல்கும் ராமராமா
இன்னல்தருமரணஞ் ஜெனனந்தீர்த்து ராமராமா பத
மீய்ந்துவினையருத் தாண்டுரெட்சித்திடும் ராமராமா (31)

எழுவகைத்தோற்றத் திழிபிறப்பாய்வந்து ராமராமா நாயே
னேற்றுத்திரிந்துபின் செற்றுப்பிரகாமல் ராமராமா
அழுதகைப்பிள்ளையைத் தாயெடுக்கும்போலே ராமராமா எனக்
கஞ்சலென்றேயுந்தன் செஞ்சரணந்தாரும் ராமராமா (32)

மாதவகேசவ தேவகிநந்தன ராமராமா சுப்பிர
மண்ணியனாகியே யென்னைரெட்சித்திடும் ராமராமா
தாதவிழுந்துளபத்திருமார்பசீ ராமராமா வுந்தன்
தாளிணைக்கே சரணஞ் சரணஞ்சிவ ராமராமா (33)

சரிதை கிரிகை யோக ஞானம்நாலுக்கும் ராமராமா பல
சாலோக சாமீப சாரூப சாயுட்சிய ராமராமா
தெரியவடியார்க் கனுக்கிரகஞ் செய்திடும் ராமராமா இந்த
ஜெகத்திலனேக மகத்துவம் விளங்கிய ராமராமா (34)

நான்முகனுகிப் படைத்தருளுஞ்சிவ ராமராமா திரு
நாரணனுகியெல்லாரையும் ரட்சிக்கும் ராமராமா
ஈனமில்லாருத்திரனுகிச் சங்காரஞ்செய் ராமராமா எங்கும்
ஈஸ்வரனுகித்திரோதபஞ்செய்திடும் ராமராமா (35)

பெண்ணுணிணைப்பெற்று மாண்பெண்ணிணைப்பெற்றும் ராமராமா இந்த
பேருலகுண்டான வாரதுபோலவே ராமராமா
நண்ணியமாய்கையில் நீ நினக்குள்மாய்கை ராமராமா ராம
நாமத்திலேரெண்டெழுத்துச்சிவசிவ ராமராமா. (36)

அண்டரெல்லாந் தசகண்டனுக்கஞ்சியே ராமராமா பா
லாழிதனிற்சென்று மேழமூடன்சொல்ல ராமராமா
கண்டனந்தன்பேரிற் கொண்டயோகம்நீங்கி ராமராமா திருக்
காட்சிகொடுத்தும்மை யாட்சிசெய்வேனென்ற ராமராமா (37)

வானவரியாவரும் வானர ராகவே ராமராமா சிவன்
மாருதியாகவே நேருமெனச்சொன்ன ராமராமா
தானமிகுந்திடும் பூவயனைப்பார்த்து ராமராமா நீ
சாம்புவனுகவே போம்பாரினிலென்று ராமராமா (38)

சூரியனைப்பார்த்துச் சுக்கிரீபனுகவே ராமராமா வரச்
சொல்லிக்கனலியை வல்லநீலனுக ராமராமா
ஆரியவிந்திரனைநேருடனே நோக்கி ராமராமா நீ
யுங்கதனுகவே பொங்கமுடன்சொன்ன ராமராமா (39)

செந்திருமாதினைச் சீதையாகச்செய்து ராமராமா சுதரி
ஜெனத்தையளந்தனை நினைத்த தம்பியராக்கி ராமராமா
மண்டலந்தன்னிற் றெசரதராசர்க்கு ராமராமா புத்திர
மந்திரகாமேஷ்டியிற் சந்ததியாய்வந்த ராமராமா. (40)

சங்குகைகேசி மகன்பரதனுகவே ராமராமா அனந்
தன்னுடன்சக்கரம் பின்னிளைஞ்ஞோராக ராமராமா
எங்கும்புகழத்திரு வவதாரமாய் ராமராமா ராசர்க்
கேற்றதொழிலெல்லா மூர்க்கமுடன் கற்ற ராமராமா (41)

சந்தமிகும்பனி ரெண்டுவெயதிலே ராமராமா முனி
தன்னோடுசென்றுவண தாடகையைக்கொன்ற ராமராமா
முந்துஞ்சுவாகுவைக் கொன்று மாரீசனை ராமராமா வாயு
மூரிச்சாம்விட்டு வாரிக்கிடையிட்ட ராமாரமா (42)

இட்டமுடன்விஸ்வா மித்திரயாகங்காத்து ராமராமா அப்பா
லேகியாகலிகை மோகசாபந்தீர்த்து ராமராமா
கட்டழகன்ஜெனகன்புரியிற்சென்று ராமராமா சிவன்
கைத்தனுவைக்கையிற் பற்றிமுறித்திட்ட ராமராமா (43)

ஜானகிகல்யாண மேளமுடன்செய்த ராமராமா ஜெம
தக்கனி மகன்வில்லை வுக்கிரமாய்வாங்கிய ராமராமா
ஞானமுனிவர்கொண்டாடவயோத்தியில் ராமராமா பனி
ரெண்டுவருஷமன்புடன்விளங்கிய ராமராமா (44)

அன்புகொண்டேமணிமாமுடிசூட்டிய ராமராமா தந்தை
யாரபாரஞ்செய்யவே கைகேசிவந்து ராமராமா
என்புதல்வன் பரதற்கபிஷேகநீ ராமராமா வனத்
தின்னேரமேபோகென் றன்னேபோரனென்ற ராமராமா (45)

தம்பியோடுந் திருத்தாரமுடன்சென்று ராம ராமா குக
சத்தியனைக்கண்டு சித்திரக்கூடத்தினில் ராம ராமா
அன்புடனேசென்றிருந் தருளுநாளில் ராம ராமா
பரதன்வரக்கண்டுநற் பொன்பாதுகைதந்த ராம ராமா (46)

தாதைக்குநற்கடன்செய்து விராதனை ராம ராமா வெட்டிச்
சங்கரித்தே சரபங்கனைக்கண்டுபோய் ராம ராமா
ஓதிடுமெத்திரிமாமுனியைக்கண்டு ராம ராமா கும்பத்
துற்றவனைக்கண்டு வெற்றிவில்வாங்கிய ராம ராமா (47)

சம்பாதிதம்பியை முன்பாகவேகண்டு ராம ராமா
கோதாவிரியிற்றவ மேவிடுநாளினில் ராம ராமா
வம்புகள்பேசிய சூர்ப்பநகிதன்னை ராம ராமா தம்பி
வாளிவவள் வினைமுலை மூக்கைக்கொய்த ராம ராமா (48)

கண்டுகரன்படை மண்டிவரக்கண்டு ராம ராமா திரு
கைச்சிலையாலவர் மெய்ச்சிரம்போக்கிய ராம ராமா
வண்டமாரீசன் பொன்கொண்டமானய்வர ராம ராமா
ராவணன்வந்தே மாயப்பெண்ணைக்கொண்டுபோக ராம ராமா (49)

தேயுமுடற் சடாயுதனைக்கண்டு ராம ராமா அன்று
தீக்கடன்நீர்க்கடன் யோக்கியமுடன்செய்த ராம ராமா
பாயுமசோமுகிதன்னைக்கண்டே தம்பி ராம ராமா மூக்கைப்
பற்றியநாக்கையுஞ் சுத்றியரிந்தபின் ராம ராமா (50)

பவந்தனைச்செய்யுங்கவந்தன் கரத்தினை ராம ராமா வெட்டிப்
பாவத்திஞல்சாபத்தினைத்தீர்த்த ராம ராமா
நிவந்தவித்துச் சவரிதனைக்கண்டு ராம ராமா பிரவி
நீங்கக்கதியினிலோங்கத்திருத்திய ராம ராமா (51)

பம்பையில்நீராடி நம்புஞ்சுக்கிரீபனை ராம ராமா கண்டு
பாரமத நீமரமேழுமுருவவே ராம ராமா
முன்புசரம்விட்டு துந்துமியின்றலை ராம ராமா தம்பி
முண்டகக்கால் விரல்கொண்டெறியக்கண்டு ராம ராமா (52)

வாலிதனையோரம்பாலே வதைசெய்து ராம ராமா சூரியன்
மைந்தன்சிரசினிற் சுந்திரமுடிசூட்டி ராம ராமா
தாலம்புகழவே வாலிமகனையும் ராம ரமா
கிட்கிந்தைநகரத்தில் மெய்வளரச்செய்த ராம ராமா (53)

மாரிக்காலநாலுந்தீர்த்தியானமாய் ராம ராமா சதுர்
மாதவிரதநோற்றுதரவாகவே ராம ராமா
வீரக்குரங்குகள்சேரத் தேவிதன்னை ராம ராமா தேட
விட்டனுமன்கையிற் ஜெட்டாழியை நல்கும் ராம ராமா (54)
கடலைக்கடந்தனுமன் சென்றிலங்கையில் ராம ராமா தாயைக்
கண்டுபேசிக்கொண்டு அண்டர்கொண்டாடவே ராம ராமா
அடலைச்செயவந்த அரக்கனைப்பூமியில் ராம ராமா
இட்டரைத்தஞ்சு சேனுபதிமாரையுங்கொன்று ராம ராமா (55)

சம்புமாலிபெண்பதினுபிரம்பேரை ராம ராமா உயிர்
தாங்காமற்கொன்றந்த பூங்காவெல்லாம்போக்கி ராம ராமா
வெம்புகனற் கொண்டிலங்கைதனைச் சுட்டு ராம ராமா அனுமன்
மீண்டதுகண்டன்பு பூண்டவனேடும்போய் ராம ராமா (56)

எழுபத்துவெள்ளம் வானரசேனைகள் ராம ராமா கூடி
யெங்குமுடன்வர அங்கதன்சுக்கிரீபன் ராம ராமா
சூழமற்றுள்ள பெரும்படையோடும்போய் ராம ராமா தெற்குத்
தொல்லைக்கடற்கரை யெல்லைக்குத்தான்வந்து ராம ராமா (57)

178832
-600 008

கண்டுவிபூஷணன் வந்துவணங்கவே ராம ராமா கற்ற
கர்த்தன்வராமற் றீ யஸ்திரம்விட்டேசீரி ராம ராமா
மண்டுகடற்கிறை வந்துவணங்கிட ராம ராமா இலங்கை
மட்டுந்திருவணை கட்டிக்கடந்துபோய் ராம ராமா (58)

சுவேலத்டியிலிருந்து சுக்கிரீபனும் ராம ராமா நீசன்
துங்கமகுடத்தை பங்கஞ்செய்தபின்பு ராம ராமா
விவேகத்தில்மிஞ்சிய அங்கதனைப்பார்த்து ராம ராமா தூது
விட்டிணங்காமற் கண்டட்டகாசஞ்செய்த ராம ராமா (59)

வீரரையெல்லா மணிபகுக்கக்கண்டு ராம ராமா கோவ
மிஞ்கிய ராவணன் அஞ்சிடாமல்வந்து ராம ராமா
போர்புரிந்து தன்படையெல்லாமாளவே ராம ராமா தோற்ற
பூமனை யின்றுபோய் நாளை நீவாவென்ற ராம ராமா (60)

நாளையவன் வந்திடாமற் கும்பகர்னன் ராம ராமா போருக்கு
நண்ணக்கருணனைக் கொன்றதிகாயனை ராம ராமா
வாளுக்கிரையாகத் தம்பிகொல்லக்கண்டு ராம ராமா வில்லை
வாங்கி மேகநாதனேங்கிவரக்கண்டு ராம ராமா (61)

தம்பிபோர்செய்திட வெம்பிமேகநாதன் ராம ராமா நாக
சாயகத்தைவிட்டு மாயஞ்செய்யக்கண்டு ராம ராமா
அம்புவிவிற்கெருடன் வந்தெல்லாரையும் ராம ராமா உய்ய
அனுக்கிரகஞ்செய்த பரப்பிர்மநாறக ராம ராமா (62)

பின்னுமொருநாள் பிர்மாஸ்திரந்தொட்டு ராம ராமா எல்லாப்
பேரையும்மேகநாதன் கொன்றிடக்கண்டு ராம ராமா
மன்னுமருத்துமலை யனுமன்றா ராம ராமா போரில்
மாண்டாரெல்லாமுய்ய மீண்டனுக்கிரகஞ்செய்த ராம ராமா (63)

செய்யத்தம்பிசீறிவெய்ய வண்போர்செய்து ராம ராமா
இந்திரஜித்தின்தலைகொய்து வைத்துதொழக்கண்டு ராம ராமா
வையம்நடுங்கவே மூலவெள்ளப்படை ராம ராமா நேரே
வந்தாயிரவெள்ளம் பிந்தாமற்போர்செய்ய ராம ராமா (64)

ஒரொருவர்க்கொரு ராமமுகவந்து ராம ராமா வந்த
ஒன்னவரையெல்லாஞ் சின்னபின்னஞ்செய்த ராம ராமா
சேருமகோதரன்வந்து போர்செய்யவே ராம ராமா ஒரு
செஞ்சரத்தாலவன் தன்சிறம்வீழ்த்திய ராம ராமா (65)

தேவர்நடுங்கிட ராவணன்தேரேரி ராம ராமா எட்டுத்
திக்குங்குலுங்கவே யட்டகாசஞ்செய்து ராம ராமா
பாவம்வந்தாற்போல்வந்து போர்செய்திட ராம ராமா அவன்
பத்துத்தலைகளும் தத்தச்சரம்விட்ட ராம ராமா (66)

இராவணசங்காரம் பாவமரச்செய்து ராம ராமா லோக
நாயகியைக்கண்டு மாயவேகஞ்செய்து ராம ராமா
தேவர்கள்போற்ற விமானத்திலேரியே ராம ராமா செல்வஞ்
சேர்ந்த வயோத்தியிற் சார்ந்தன்னையைக்கண்டு ராம ராமா (67)

வானரவீரருந் தம்பிமாரும்போற்ற ராம ராமா தேவர்
வந்து வணங்கிடச்சுந்திரமுடிசூட்டி ராம ராமா
தேனிலங்குங்குழல் சீதாதேவியோடு ராம ராமா இரத்ன
சிங்காசனத்தினிற் பொங்கமுடன்வாழ்ந்த ராம ராமா (68)

மண்ணிலெல்லாவரும் வாழமழைபெய்ய ராம ராமா செல்வம்
வர்த்திக்கநன்மைகள் சித்திக்கயாவர்க்கும் ராம ராமா
விண்ணவர்வாழ்த்த அயோத்திநகரத்தில் ராம ராமா என்றும்
வீற்றிருந்தேபுவிகாத்த ஸ்ரீராகவ ராம ராமா (69)

வானரரானவர் தானமதிற்செல்ல ராம ராமா விட்டு
வந்தபின்செந்தமிழ்தந்த முனிவந்து ராம ராமா
ஞானமில்லாராவணன் தோத்திரஞ்சொல்ல ராம ராமா கேட்டு
நற்றவனைப்பொதியத்திலனுப்பிய ராம ராமா (70)

தம்பிமார்மூவரும் தாய்மார்கள்மூவரும் ராம ராமா
மெத்தசந்தோஷமாகவே அந்தணர்வாழ்த்திட ராம ராமா
அம்புவியோர்போற்றச் செந்திருச்சீதைக்கி ராம ராமா கெற்ப
மானதுகண்டுநெற் றூனதர்மஞ்செய்த ராம ராமா (71)

ஒற்றவர்கள்வந்துமுன் னற்றவத்தோர்சில ராம ராமா சீதை
யுற்றமிக்கிக்குற்றஞ் சொற்றனரென்னவே ராம ராமா
வெற்றிமிகுந் தம்பியைப்பார்த்துச்சீதையை ராம ராமா காட்டில்
விட்டுவருகவென்றட்டிசெய்யாதவன் ராம ராமா (72)

வான்மீகியாச்சிரமந் தன்னருகேவிட்டு ராம ராமா தம்பி
வந்தபின்மாமுனிவன் கண்டுசீதையை ராம ராமா
கானிலருந்தவப் பெண்களினிடத்தினில் ராம ராமா சீதை
கண்டிருக்குநாளில் இரண்டுபிள்ளைபெற ராம ராமா (73)

குச லவனென்றுபேரிட்டு வான்மீகியும் ராம ராமா அன்பு
கொண்டுவளர்ந்திருக்குங் காலந்தன்னிலே ராம ராமா
விசையமிகும் ல்வணாசூரனைக்கொல்ல ராம ராமா சத்துரு
விக்கினனைச் சொல்லிவிட்ட சிவ சிவ ராம ராமா (74)

சத்துருவிக்கினன் லவணாசூரனைக்கொன்று ராம ராமா அவன்
தனபதியாம்துரைதன்னை நீயாளென்று ராம ராமா
வித்தகனுந்தன்மகன் சுவாகுவைவைத்து ராம ராமா சத்துரு
விக்கினன்வந்திடத் தக்கதெனச்சொன்ன ராம ராமா (75)

யாமனரயோஒருவன்மகன் மாண்டிட ராம ராமா என்றும்
வாலமரணமில்லாத நன்னாட்டிலே ராம ராமா
பாலனிறந்ததுன் னீதியில்லாமலே ராம ராமா என்று
பாமரையோன்சொல்லவே கும்பமாமுனி ராம ராமா (76)

வந்துகலியல்லாமற் சதுரர்க்கு ராம ராமா தவம்
வாய்ந்திடாதிந்த வனத்திலோர் சூத்திரன் ராம ராமா
விந்தையுடன்தவஞ் செய்ததினாலென்று ராம ராமா வேத
வித்தினன் சிசு இறந்தானென்று சொல்லவே ராம ராமா 77

கேட்டவுடன்தவஞ்செய்த சம்புகன்பாலில் ராம ராமா சென்று
இட்டிக்காவாளில் வெட்டியிவனுக்கு ராம ராமா
நாட்டமிகுஞ் சொற்கலோகங் கொடுத்தபின் ராம ராமா அன்றே
நான்மறையோன் சிருவர்க்குயிர்நல்கிய ராம ராமா (78)

அசுவமேதயாகஞ்செய்யவேண்டுமென்று ராம ராமா கோமதி
ஆற்றங்கரையினில் மாற்றேரும்பொன்னாலே ராம ராமா
விசுவாசமாகவே சீலதையுருச்செய்து ராம ராமா
அசுவமேதயாக முனிவோரைக்கொண்டேசெய்த ராம ராமா (79)

செய்யும்யாகத்தினில் வான்மீகியேகவே ராம ராமா சீதை
சிருவரிருவரு முருதியாகவேவந்து ராம ராமா
உய்யுமுந்தன்கதை செய்யச்செருக்கத்தை ராம ராமா புதல்வர்
ஓதக்கண்டேசொர்னம் போதக்கொடுத்திட்ட ராம ராமா (80)

நாங்கள்முனிமக்கள் செல்வம்வேண்டாமென்று ராம ராமா குச
லவர்களுரைத்திடத் தவமுனிவன்வந்து ராம ராமா
தாங்கும் ராமாவுந்தன் மக்களென்றுசொல்ல ராம ராமா மெத்தச்
சந்தோசமாகவே மைந்தரைக்கைக்கொண்டு ராம ராமா (81)

மைந்தரைக்கைக்கொண்டு சீதையெங்கேயென்று ராம ராமா அவர்
மனதில்நினைந்தச்சணத்தில் வான்மீகியும் ராம ராமா
சிந்தைமகிழ்ந்து திருவைக்கூட்டிவந்து ராம ராமா குற்றந்
தேவிக்கில்லைக்கூட்டிப்போகநீ யென்றிட ராம ராமா (82)

தேவியைக்கூவியப்போது வராமலே ராம ராமா பூமா
தேவி வழிதரப்பூவினுள்ப்போனபின் ராம ராமா
கோவமதாய்ப்புவியைப் பிளப்பேனென்று ராம ராமா மெத்தக்
கோவிக்கக்கண்டெதிர் பூமிக்கபன்வந்து ராம ராமா (83)

சீதைவைகுண்டம்புகுந்தனள் நீயின்று ராம ராமா உன்
சிருவரைக்கூட்டியுரு மயோத்திக்கென்று ராம ராமா
ஓதியயன்போகவே மக்களைக்கொண்டு ராம ராமா அயோத்திக்
குற்றரியாசனத் துற்றுவிளங்கிய ராம ராமா (84)

உற்றுவிளங்கிட அன்னைமார்மூவர்க்கும் ராம ராமா உயிர்
நோய்ந்திடக்கண்டவர்க்காய்ந்த கடன்செய்து ராம ராமா
வெற்றியுடன்பின்பு பத்துயாகஞ்செய்து ராம ராமா இந்த
மேதினியைப் புரந்தாதரவாகியே ராம ராமா (85)

கேகயராசன்சொல்லால்ச் சிந்துதீரத்தில் ராம ராமா வந்த
கின்னரரைப்பரதன் கொன்று அன்னிலம் ராம ராமா
வாகைபுனை பரதன்மகன் தக்கற்கு ராம ராம புட்கலா
வரதநகரங் கொடுத்ர்த்தநல்கிய ராம ராமா (86)

இந்திரசித்தினைக்கொன்ற தம்பிமக்கள் ராம ராமா இருவரில்
அங்கதனுக்குஞ் சந்திரகேதுக்கும் ராம ராமா
செந்திருமேவிய காராபதத்தையும் ராம ராமா மல்ல
தேசத்தையுங்கொடுத்தே சத்தியாய்வைத்த ராம ராமா (87)

உற்றவருந்தவக்கற்றவரும்போற்ற ராம ராமா பதினொ
ராயிரமாண்டு சீராயுலகாண்ட ராம ராமா
வெற்றியுடன்வாழ்ந்திருக்குங்காலத்தினில் ராம ராமா தருமன்
மேவிமறையவ ராகிவரக்கண்டு ராம ராமா (88)

கண்டமறையவனுரும்வராமலே ராம ராமா
இங்குகாவல்வையென்றிளையோனையிருத்திய ராம ராமா
சண்டனொடுங்கூடிவார்த்தை சொல்லும்போது ராம ராமா
துருவாசன்பசித்துவரவேகண்டிளையவன் ராம ராமா (89)

காவல்விடத்தருமன் மறையக்கண்டு ராம ராமா கோபங்
காண்ட முனிவனுக் உண்டி கொதித்தபின் ராம ராமா
மேவுதம்பிவந்துன் கற்பனையைத்தள்ளும் ராம ராமா என்னை
வெட்டிவிடுமென்று திட்டமுடன்சொல்ல ராம ராமா (90)

வதிட்டமுனிவன்சொல்லால் தம்பியைப்பார்த்து ராம ராமா கிட்ட
வாராமற்போவென்று நேராகச்சொல்லிய ராம ராமா
செயித்தபுகழ்தம்பிகேட்டுச் சரயுவில் ராம ராமா சென்று
செய்யும்யோகத்தினில் வைகுண்டஞ்சேர்ந்திட ராம ராமா (91)

வானரவீரரெல்லாரும் வரச்செய்து ராம ராமா குகனும்
வந்திடமைந்தர்க்கு சுந்திரமுடிசூட்டி ராம ராமா
தானஞ்செய்து தயவாகவிரங்கியே ராம ராமா யோகங்
தன்னிலிருந்துன்னை யுன்னியிருந்தசீர் ராம ராமா (92)

முப்பத்துமுக்கோடி தேவர்கள் போற்றவே ராம ராமா தம்பி
மூவர் சங்கு சக்கர ரூபமதாகவே ராம ராமா
ஒப்பற்றிலங்குங் கெருடன்புயத்தினில் ராம ராமா நிமிர்ந்
தொய்யெனவேதிரு வைகுண்டஞ்சேர்ந்திட்ட ராம ராமா (93)

வைகுண்டஞ்சேர வயோத்தியுள்ளோரெல்லாம் ராம ராமா என்றும்
வாழ்ந்திருக்கச்சொற்கமீய்ந்து திருவொடும் ராம ராமா
செய்யமலரயன் வந்து துதித்திட ராம ராமா பூமா
தேவிமாரோடுஞ் சிறந்துவிளங்கிய ராம ராமா (94)
நோயும்வறுமையுஞ் சண்டைசெய்யாமலே திரு
நோக்குறநோக்கிய நோக்கைவிடாதுடல் ராம ராமா
மாயும்பொழுதிலும் பயமில்லாமல் ராம ராமா என்முன்
வந்துனதுபதந் தந்தருளவேணும் ராம ராமா (95)
சந்ததமுமுனை வந்தனைசெய்யவும் ராம ராமா கொடுந்
தாரித்திரியமில்லாமற் பூரித்திருக்கவும் ராம ராமா
அந்தியத்திலுன்னைச் சிந்தனைசெய்யவும் ராம ராமா எனக்
கானவரமது சரணருளவேணும் ராம ராமா (96)
லெட்சுமிகல்யாண நாதா நமோ நம ராம ராமா திரு
நீரணியுஞ் சங்கரனே நமோ நம ராம ராமா
தற்பரமாம் பிர்மரூபா நமோநம ராம ராமா என்னைத்
தாபரிக்குஞ்சண்முகனே நமோ நம ராம ராமா (97)
காருத்தா போற்றி கவுத்துவமார் போற்றி ராம ராமா கங்கை
கண்டபாதா போற்றி யண்டநாதா போற்றி ராம ராமா
மாகர்த்தா போற்றி மகிமகுணா போற்றி ராம ராமா கடல்
வண்ணா போற்றி மலர்க்கண்ணா போற்றி போற்றி ராம ராமா (98)
திருமருமார்பா ஜெய ஜெய ஸ்ரீரங்க ராம ராமா ஜெய
தேவாதிதேவ ஜெய ஜெய ராகவ ராம ராமா
அரியரிகேசவ ஜெய ஜெய அச்சுத ராம ராமா அடியார்க்
கானந்தமாகிய ஞானந்தருஞ்சிவ ராம ராமா (99)

மாமழைவாழி மழைவிளங்க வாழி ராம ராமா நீதி
மன்னவர் வாழி நற்கண்ணிமாரும் வாழி ராம ராமா
பூமிசை சைவம் வைணவமும் வாழி ராம ராமா நாமம்
போற்றிப்படிப்பவர் கீர்த்தியுடன் வாழி ராம ராமா (100)

ராமநாமம் முற்றுப்பெற்றது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

# ரம்.

கல ஜனங்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்
த்தான்பேட்டையில் ஸ்தாபித்திருக்கும் வித்தியாசந்தானம்
திராசாலையில் இங்கிலீஷ், மலையாளம், தமிழ், இந்த மூன்று பாஷை
ரில் புஸ்தகங்கள், பத்திரிகைகள், குறி, பாட்டம், மிச்சவாரம் முதலான
வைகளுக்குள்ள ரசீதுகள், அன்யாயப்பகர்ப்பு, கல்யாணப்பத்திரிகை
கணக்குபுஸ்தகங்கள் முதலானதும் பலமாதிரி நவீன நாகரீகத்திற்கேற்றவாறு
அச்சடிவேலைகள் குறைந்த சார்ஜில் குறித்தகாலந் தவறாமல் செய்து கொடுக்கப்படும்.

தவிற வியாபாரிகளுக்கு வேண்டிய கணக்கு புஸ்தகங்களும், வேறு பலமாதிரி புஸ்தகங்களும், நல்ல அழகோடுகூடி பைண்டுசெய்து கொடுக்கப்படும். மற்ற விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்துகொள்ள வேண்டியது.

இப்படிக்கு,

பா. கி. சிதம்பரம் பிள்ளை

மானேஜிங் புரொப்ரைட்டர்,

பாலக்காடு.